


தேரூர் குறண்டியிலுள்ள ஈசா வித்யா பள்ளியில் நடந்த நிகழ்ச்சியில் சத்குரு ஜக்கிவாசு தேவ் பேசினார்.
அடுத்தபடம்: நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள்.

# கல்விக் கூடத்தில் கலாசாரம் அவசியம்
# குமரியில் சத்குரு ஜக்கிவாசுதேவ் ஆசியுரை

சுசீந்திரம், ஆக.18-

கல்வி, கலாசாரம், ஆன்மிகம் ஆகிய மூன்றும் சேர்ந்திருக்கும்போது இந்தியா உயர்ந்த நாடாக முன்னேறும் என தேரூர் அருகேயுள்ள குறண்டி ஈசா வித்யா மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு வருகை தந்த சத்குரு ஜக்கிவாசுதேவ் பேசினார்.

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நேற்று காலை வருகை தந்த கோயமுத்தூர் வெள்ளியங்கிரி ஈசா யோக மையத்தின் தலைவரும் ஈசா யோகா தொண்டர்களின் சத்குருவுமான ஜக்கிவாசுதேவ் நேற்று காலை ஒன்பது மணிக்கு தேரூர் குறண்டியில் உள்ள ஈசா வித்யா மெட்ரிகுலேசன் பள்ளிக்கு வருகை தந்தார்.

விழாவில் பள்ளி மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடந்தது. தமிழக ஈசா வித்யா பள்ளிகளின் ஒருங்கிணைப்பாளர் வெங்கட், கன்னியாகுமரி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஐயம் பெருமாள், ஈசா தன்னார்வ தொண்டர் குமரன், பள்ளியின் முதல்வர் சைலஜா குமாரி ஆகியோர் பேசினர்.

இதை தொடர்ந்து சத்குரு ஜக்கிவாசுதேவ் பேசும்போது:-

300 ஆண்டுகளுக்கு முன்னால் மனிதன் எழுத்தறிவு இல்லாமல் இருந்தான். அந்த கால கட்டத்தில் கல்வி என்பது மரத்தின் கீழே யாரோ ஒருவர் கல்வி சொல்லி கொடுத்து வந்தனர். ஆயிரம் ஆண்டுகளாக தொடர்ந்து வந்த கலாசாரம் இது. அந்த காலத்தில் இந்தியாவை சுற்றிபார்க்க வந்த ஆங்கிலேயர் ஒருவர் அவரது பிரிட்டிஷ் நாட்டிற்கு கடிதம் ஒன்று எழுதினார். அந்த கடிதத்தில் இரண்டு அம்சங்களை குறிப்பிட்டிருந்தார். முதலாவது இந்தியாவில் கல்வியறிவு இல்லாமல் செய்வது, ஆன்மிகம் இல்லாமல் செய்வது. இந்த இரண்டையும் நாம் செய்தால் இந்த நாட்டை எளிதாக கைப்பற்றிவிடலாம் என அவர் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

அதுபோலவே இந்தியாவை கைப்பற்றிய ஆங்கிலேயர்கள் இந்த இரண்டையும் இல்லாமல் ஆக்கி இந்தியாவிற்குள் நுழைந்தார்கள். முந்தைய காலங்களில் கல்வி, கலாசாரம், ஆன்மிகம் என மூன்றும் கலந்த உலகின் உயர்ந்த நாடாக இந்தியா விளங்கியது. இதனால் வெளிநாட்டவர்கள் எப்போதுமே இந்தியாவிற்கு வரவேண்டும் என்ற கனவில் இருந்தனர்.

ஆனால் தற்போதைய இந்தியாவின் நிலையில் வெளிநாட்டவருக்கு விசா கொடுத்தாலும் கடலில் குதித்து நீச்சலடித்து உடனடியாக திரும்பி சென்று விடுவர். வெளிநாட்டவர்கள் தற்போது முன்னேற்றமான நிலையில் இருக்கிறார்கள். ஆனால் நாம் அவர்களின் பழைய கலாசாரத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம்.

இந்தியா முன்னேற வேண்டுமானால் இந்த நாட்டில் குக்கிராமங்களிலும் கல்வி எளிதாக கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். இந்தியா ஒவ்வொரு மாநிலத்திலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் வெவ்வேறு விதமான நடைமுறைகளை கொண்டுள்ளது.

பாரதநாடு ஒண்ணா சேரணும்னா அதற்கு அடிப்படை கலாசாரம் தான். குழந்தைகளின் மனதில் அடிப்படையிலேயே கலாசாரத்தை ஏற்படுத்தவேண்டும். கார்பன்டை ஆக்ஸைடு சுவாசிப்பது தப்பு என எல்லோருக்கும் தெரியும். ஆக்ஸிஜனை தானே சுவாசிக்கிறோம். அதுபோல சுற்றுச்சூழலுக்கு ஏற்ப எப்படி செயல்படுகிறோமோ அதுதான் விஞ்ஞானபூர்வ கலாசாரம்.

ஆனந்தமான நிலையில் இருப்பதற்கு ஒரு அடிப்படை இருக்கும். அதே நேரத்தில் அடிப்படையே இல்லாமல் எப்படி ஒருத்தர் இருக்க முடியும். கல்வி கூடத்தை கலாசார கூடாரமாக கொண்டு வரவேண்டும். இதை வெகு சீக்கிரமாக கொண்டு வர அனைவரும் முயற்சி செய்ய வேண்டும்.

மரம் வைத்தால் அதனால் நாம் பயனடைவோம் என்ற நோக்கம் இல்லாமல் யாரோ ஒருவர் நடும் மரக்கன்று பலருக்கு பயன்படுவது போல தற்போது நாம் உருவாக்கும் பள்ளி கூடமும் எதிர்காலத்தில் பலருக்கும் பயனுள்ளதாக மாறும் என நினைக்க வேண்டும். இது குழந்தைகளின் மனநிலையிலும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

பல ஏழை குழந்தைகளின் கல்வி உதவிக்காக குமரி மாவட்டத்தை சேர்ந்த 500 ஈசா யோகா தொண்டர்கள் ஒவ்வொரு புதன் கிழமையும் ஒரு வேளை உணவை தவிர்த்துவிட்டு அந்த உணவிற்கு தேவையான பணத்தை கல்வி உதவிக்கு தந்து உதவுகிறார்கள்.

இவர்களை போல 10 பேருக்காவது ஏதாவது உதவி செய்யவேண்டும் என்ற உணர்வு மக்களின் மனதில் மலர வேண்டும் என எதிர்பார்க்கிறேன் என ஜக்கிவாசுதேவ் பேசினார்.

நேற்று காலை முதலே மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் ஏராளமான ஈசா யோகா தொண்டர்களும், பள்ளி குழந்தைகளின் பெற்றோர்களும் பள்ளியில் ஆயிரக்கணக்கில் குவிந்திருந்தனர். பள்ளி மாணவர்கள் சார்பில் ஜக்கிவாசுதேவ்ற்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது.

இதை தொடர்ந்து ஈசா தொண்டர்களின் இசைநிகழ்ச்சி நடந்தது.